

கரூர் சட்டமன்ற தொகுதி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் தாந்தோன்றிமலை பழைய நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.



திருவாரூர் மாவட்ட இளைஞரணி சார்பில் மன்னார்குடியில் கலைஞர் நூலகத்தை தமிழ்நாடு அரசின் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திறந்துவைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையமங்கலம் ஜி.பாலு,நகர செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் நா.இளையராஜா,சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் வி.கே. முருகானந்தம் ,வி.வினோத்குமார்,எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி.எடிசன், தாகிர் அலி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

வருகிற சட்டமன்றத் தேர்தலில்

# 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெற பணிகளை துவக்கி விட்டார் முதல்வர்!

## கரூர் – தாந்தோன்றி மலை பொதுக் கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

*கரூர், நவ.13 -*

எந்த மாநிலத்தில் தேர்தல் நடந்தாலும் தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகளையே கொடுக்கிறார்கள். 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பணிகளை துவக்கி விட்டார் என கரூர் தாந்தோன்றி மலையில் நடைபெற்ற கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசினார்.



கரூர் சட்டமன்ற தொகுதி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க தரணி போற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் தாந்தோன்றி மலை பழைய நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது. கரூர் மாநகர செயலாளர்,மண்டல குழு தலைவர் எஸ் பி கனகராஜ் தலைமை வகித்தார். மாநகராட்சி துணை மேயர் மேற்கு பகுதி செயலாளர் தாரணி பி. சரவணன் வரவேற்புரையாற்றினார். கரூர் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:-

கரூர் மாவட்டத்திற்கு ரூ.3ஆயிரம் கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை மக்கள் நலத்திட்டங்களைமுதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் நான்கு சட்டமன்றத் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்திற்கு வழங்கியுள்ளார்கள். இளைஞர்களின் எழுச்சி நாயகன் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டந்தோறும் அரசு நலத்திட்ட பணிகளை தொடங்கி வைத்தும் பணிகளை விரைவு படுத்தியும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். சட்டமன்றத் தேர்தல் என்பது திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி அவர்களின் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் விளக்க பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்படி நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் மகத்தான வெற்றியை பெற்றார்களோ அதைப்போலவே வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலிலும் 200 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு வைத்துள்ளார். அதற்கான பணிகளை தொடங்கி நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தலைவர் அறிவித்த வேட்பாளர்களை மகத்தான வெற்றி பெறச் செய்த பொதுமக்களுக்கு எனக்கு அன்பான வேண்டுகோளை விடுகிறேன் வரக்கூடிய சட்டமன்ற தேர்தலிலும் இதே போல் மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்கிற வேண்டுகோளை உங்களது பாதங்களில் வைக்கிறேன்.

கரூர் தொகுதிக்கான சாதனை திட்டங்களை சொல்கின்றபோது ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக விளங்க கூடிய வகையில் வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை ஏன் இந்தியாவில் எந்த மாநிலத்தில் தேர்தல் வந்தாலும் அந்த மாநிலத்தில் இருக்கக் கூடிய அரசியல் இயக்கங்கள் எல்லாம் தங்களுடைய தேர்தல் வாக்குறுதிகளாக நமது திட்டங்களை எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி காட்டி உள்ளார்கள்.

மகளிருக்கு ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டத்தில் கோடிக்கணக்கான தாய்மார்கள் பயன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசு பேருந்துகளிலே மகளிருக்கு கட்டணம் இல்லாமல் விடியல் பயணத்தை தொடங்கி வைத்து இன்று கோடிக்கணக்கான மகளிர் பயனடையும் சிறப்பான நிகழ்வை உருவாக்கி இருக்கிறார்கள். தங்களது குழந்தைகளை அரசு பள்ளிக்கு அனுப்பும் வேலைக்கு செல்லக்கூடிய பெண்கள் அவசர அவசரமாக காலை உணவை கொடுத்து அனுப்ப வேண்டிய நிலை இருந்தது. இன்னும் வேகமாக வேலைக்கு செல்ல கூடியவர்கள் குழந்தை உணவு அருந்தவில்லை என்கிற கவலையோடு சென்ற நிலையைஎல்லாம் மாற்றி முதல்வர் அவர்கள் உலகத்திற்கே வழிகாட்டக் கூடிய காலை உணவு திட்டத்தை சிறப்பான திட்டமாக உலகமே வியந்து பாராட்டும் வகையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வி என்பது மிக முக்கியம் 44 ஆயிரம் கோடி அளவிற்கு பள்ளி கல்வித்துறைக்கு நிதியை ஒதுக்கி உள்ளார்கள். உயர்கல்விக்கு 8000 கோடி நிதியை வழங்கி இருக்கிறார்கள். மக்களை தேடி மருத்துவம் நம்மை காக்கும் 48 என்கிற மகத்தான திட்டம், புதுமை ப்பெண், திட்டம், நான் முதல்வன் திட்டம் என பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த மூன்று ஆண்டுகளில் விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு ஒன்றரை லட்சம் வழங்கினார். தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் சிந்தித்து சிந்தித்து மக்களுக்காக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களை சந்தித்து அரசு திட்டங்களுக்கான பணிகளை கேட்டு பெற்று இங்கு வந்துள்ளோம். ஏறத்தாழ ஐம்பதாயிரம் கோடி அளவுக்கு கரூர் மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் முதல்வரும் துணை முதல்வரும் உறுதுணையாக இருப்பார்கள் என்கிற உறுதியை அவர்களுக்கு அளித்துள்ளோம். மக்களுடைய கோரிக்கைகளை கேட்டு செயல்படுத்தக்கூடிய ஒரு முதலமைச்சர் 20 மணி நேர மக்களுக்காக உழைக்கக்கூடிய நிலையை பார்க்கிறோம். ஒரு சாமானியன் சாலையிலே மனுவோடு நின்றாலும் கூட வாகனத்தை நிறுத்தி அந்த மனுவை வாங்கி என்ன தேவை என கேட்டு அதையும் நிறைவேற்றி தரக்கூடிய முதலமைச்சர் வழியிலே செல்கிற போது தாய்மார்களுடைய அந்த புன்னகையை புன்சிரிப்பை பார்த்து முதலமைச்சர் நல்லா இருக்கிறீர்களா என கேட்டு உங்களது உடல் நிலையை பார்த்துக் கொள்ளுங்கள் என அவர்கள் மகிழ்ச்சியோடு சொல்கிறார்கள். அடுத்த முதலமைச்சர் நீங்கள்தான் அடுத்த ஆட்சியும் உங்கள் ஆட்சிதான் என்றெல்லாம் தாய்மார்கள் பாராட்டிப் கொண்டிருக்கின்றார்கள். இதை ஏதோ நான் வார்த்தைக்காக சொல்லவில்லை. கோவை வருகின்ற போது முதலமைச்சர் வாகனத்தில் இருந்தவன் என்கிற முறையில் சொல்கிறேன். அருகில் நின்று கவனித்தவன் என்கிற முறையிலே சொல்கிறேன். இதே நிலைதான் தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தாய்மார்கள் அடுத்த முதல்வராக தொடர்ந்து ஒப்பற்ற முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆட்சி தொடர வேண்டும் என எண்ணத்திலே இருக்கிறார்கள்.

அவர் வழியில் இன்றைக்கு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்க கூடிய துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் எந்த மாவட்டமாக இருந்தாலும் அந்த மாவட்டத்தில் வளர்ச்சி பணிகளை ஆய்வு செய்து செயல்படுத்தக்கூடிய திட்டங்களை விரைவு படுத்தி முடிந்த பணிகளை தொடங்கி வைத்து திறந்து வைத்து மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்குகின்றார்கள். எனவே தமிழகம் முழுவதும் பயன்படுத்தக்கூடிய திட்டங்களை முத்தாய்ப்பாகமுன்னோட்டமாக மற்ற மாவட்டங்களை விட சிறப்பு கவனம் செலுத்தி கரூர் மாவட்டத்திற்கு தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வருகை தந்திருக்க கூடிய பெரியவர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், சகோதரிகள் அனைவரும் ஒன்றுபட்டு வரக்கூடிய காலங்களில் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களுடைய ஆதரவை வழங்கிட வேண்டும் என அன்போடு கேட்டுக் கொண்டு இந்தியாவில் இருக்கக்கூடிய சக்தி வாய்ந்த தலைவர்களிலே நம்முடைய முதல்வர் தளபதி அவர்கள் ஒரு தலைவராக இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அவரது உழைப்பு உழைப்பு என்று சொல்லி நன்றியை பணிவன்போடு சமர்ப்பித்து ஒரு நாள் முன்னதாக அறிவித்தும் இந்தக் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்த மாநகர கழக, பகுதி கழக செயலாளர்கள் அனைத்து நிர்வாகி களுக்கும் மனமார்ந்த நன்றியை மாவட்டக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேசினார்.

தஞ்சை வியானி விஸ்வா, விஜயலட்சுமி ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், பி ஆர் இளங்கோ, க.சிவகாம சுந்தரி, மாநில நிர்வாகிகள் முனவர் ஜான், பி. விஜயகுமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், கரூர் தொகுதி பார்வையாளர் பொள்ளாச்சி சித்திக், மாவட்ட நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், எம்.எஸ்கே. கருணாநிதி, பூவை.ரமேஷ் பாபு, மகேஷ்வரிசுப்பிரமணி, பி.வி.பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், ஏ.சிவராமன் காலனிசெந்தில், ஆண்டாள் ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலை கே.சுப்பிரமணி, பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்பிரமணியன், கோல்டுஸ்பாட் ஆர்.எஸ்.ராஜா, ஆர்..ஜோதிபாசு, விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பாஸ்கரன், வி.கே.வேலுச்சாமி, ப.முத்துகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் என்எஸ். ஆறுமுகம், வி.கருப்பண்ணன், எஸ்டேட் வேலுசாமி, விகேடி.ராஜ்கண்ணு, கே.சாமிநாதன், சி.கருப்பையா தர்மர், பிபி.சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ்.காளியப்பன், எம்..சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், எம். ராமலிங்கம், சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல்,

ஆர்.ஜி.சரவணமூர்த்தி, ஜிம் எம்..சிவா, கே.நந்தினி தேவி, கே.தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலை பி..பாலு, பி.சங்கர்,

புலவர் அருணா பொன்னுசாமி, வி.அருண், பி.மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, எம்.பிரின்சி, C. நவாஸ்கான், மா.அம்பிகாபதி, எஸ்.சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ். செல்வராஜ், சாவி நல்லுசாமி, எஸ்..மனோகர், எம் ஆர்.சுரேஷ்,. பங்க் கே.சுப்பிரமணி, விஆர்.அண்ணாவேலு, முன்னாள் எம்எல்ஏக்கள் பி. காமராஜ், எஸ். காமராஜ், வழக்கறிஞர்கள் என். செந்தில்குமார், இரா. குடியரசு, இரா.பிரபு, ஆர். ராமசாமி, ஆர் கந்தசாமி, மண்டல குழு தலைவர் அன்பரசன்,

மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அலமேலு மனோகரன், சிவகாமி வேலுசாமி, மாநகர கழக நிர்வாகிகள் கே வி தங்கவேல் எம். பாண்டியன், கே எஸ் அறிவின்ஸ், எம். நிஷா, அங்கு நா. பசுபதி, ஆர்.வெங்கடேஷ். கேஎம்.பாலகிருஷ்ணன், பி.சண்முகம், கே ஆர் சுந்தர்ராஜன், ஏ. ஆரோக்கிய ஜெயபால், பி. பழனிவேல், ஜி. ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, அ.க. இளமுருகு,

பகுதி கழக நிர்வாகிகள் வி. வெங்கடாசலம்,பி. மோகன், டிஜிபி வெங்கட்ராமன், எஸ் செல்வி,பி. ரவிச்சந்திரன், பி. தங்கவேல், எம். கார்த்திகேயன், வி. சந்திரசேகர்,எம் தங்கராசு, பி.சசிகுமார், கே. எம் பெரியசாமி, கே. செந்தில் சரவணன், விபிஎன் ரஞ்சித்குமார்,எஸ் சாந்தி, ஆர் லட்சுமணன்,பி. இராவணன், எஸ். பிரபாகரன், எஸ். சண்முகம், பி கிரி வாசகன், ஒமேகா சுப்பிரமணி, எம். சுப்பிரமணியம், எஸ். சரவணன், பி.நாகராஜன், கீதா ராமச்சந்திரன், எஸ். ஜெகநாதன், ஆர். ரமேஷ், வி கார்த்திகேயன், எஸ். ரமேஷ், எஸ். சரவணன், டி செந்தில் குமார், ஆர் வி ரங்கராஜ், பி. குமார், வி. மோகன் குமார், புவனேஸ்வரி அருண் , வி. காமராஜ், பி கார்த்திகேயன், பி கந்தசாமி, சி அருள் குமார், பி ஆர் கௌதம், டி. நாச்சிமுத்து, என் பரமசிவம், வள்ளி வேல்முருகன், எம். பாலசுப்பிரமணியன், எஸ் வடிவேல், எம். நாராயணன், ச. ஞானசேகரன், ஆர். மருதநாயகம், பி. சந்துரு, மு. ரவிச்சந்திரன், சி. பாண்டியன், எம். லதா, எஸ் பாபுகுமார்,

கரூர் மாநகர வட்டக் கழக செயலாளர்கள் ஆர் குமரேசன், கே. வடிவேல் அரசு, பி. நாகராஜன், டி நாச்சிமுத்து, பி தங்கதுரை, கே. பாலசுப்பிரமணியம், பி சசிகுமார், ஏ ராஜா, எம் சண்முகம், எஸ். கார்த்திகேயன், கே பழனிகுமார், டி. இளங்கோவன், பசுவை சக்திவேல், டி. மதியழகன், ஏ லாரன்ஸ், எம் ஜாகிர் உசேன், ஏ. மகேஸ்வரன், கே எஸ் சதீஷ்குமார், பி. சக்திவேல், ஆர் சண்முகசுந்தரம், சாலை ரமேஷ், எஸ். ரமேஷ் குமார், என். மணிகண்டன், கே. ஜெயராமன், டி. கார்த்திகேயன், எம். கோவிந்தராஜ், எஸ். அன்பு ரத்தினம், ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம். ராமலிங்கம், எஸ். கே சிவக்குமார், வி. செல்வராஜ், ஹசன் நவாஸ். எஸ். முருகானந்தம், ஆர். விக்னேஷ், பி. செந்தில்குமார், ஏ. விஸ்வநாத், எஸ். கார்த்திக் குமார் ,வி. சுரேஷ்குமார், எம் ராஜேந்திரன், வி. சரவணன், பி. ராமசாமி, எம் வினோத்,

கரூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் எம். சரவணன், எஸ். மாரியம்மாள், ஏ. பூங்கோதை, ஜி. ராஜேஸ்வரி, என். ரஞ்சித் குமார், க. அருள்மணி, வி. நந்தினி, எஸ். பிரேமா, எஸ். வளர்மதி, எஸ். நிர்மலா தேவி, ர.தேவி, எம் சுகந்தினி, ஆர். புவனேஸ்வரி, எஸ். யசோதா, பி . சாந்தி, வி.நிவேதா, ஏ .பாலவித்யா, ஆர். தெய்வானை, எஸ். இந்திராணி, பி. ப வசுமதி, பா. சூர்யா கலா, கே.சரஸ்வதி, ஏ. கயல்விழி, எஸ். மோகன்ராஜ், பி. பழனிச்சாமி, இரா. வேலுச்சாமி, மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

வட்டச் செயலாளர் ரமேஷ் அம்பிகாபதி நன்றியுரை கூறினார்.

தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!

*சென்னை, நவ.13 -*

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி.யின் அறிக்கை வருமாறு:

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 16-11-2024 சனிக்கிழமை காலை 10 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை, அன்பகம், அண்ணா மன்றத்தில் எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறும்.

பொருள் : கழக இளைஞர் அணிச் செயலாளர் பிறந்த நாள் விழா, 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல்

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள், மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக சட்டத் துறைச் செயலாளர் என். ஆர். இளங்கோ தெரிவித்துள்ளார்.



கூத்தாநல்லூர் நகர கழகத்தில் தலைமைக்கழகத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் சார்பு அணிகளில் இடம் பெற்றிருக்கும் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் , மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.வை மரியாதை நிமித்தம் சந்தித்து கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர். உடன் நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி மற்றும் நகரகழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கழக இளைஞரணி சார்பில் ஈரோட்டில் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைதள பயிற்சி கழக இளைஞரணி துணை செயலாளர்கள் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கு சமூக வலைதள பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமில் மண்டலம் நான்கு, ஐந்தைச் சார்ந்த இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் இலக்கியம்பட்டி ஊராட்சி 3வது வார்டில் தருமபுரி ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.மாங்கனி செல்வராஜ் மற்றும் இலக்கியம்பட்டி ஊராட்சி நிதியிலிருந்து மொத்தம் ரூ.13.80 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினை தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ சுப்ரமணி, தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர்,தருமபுரி தொகுதி பார்வையாளர் டாக்டர் ஏ.கே.தருண், தருமபுரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.எல்.காவேரி,வார்டு உறுப்பினர் திருமதி. தமிழரசி சேகர், முன்னாள் நகர செயலாளர்,மே.அன்பழகன், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் இளைய சங்கர்,தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம்,துணை அமைப்பாளர் உதயசூரியன்,தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வினோத்குமார், மற்றும் அரசு அதிகாரிகள்,ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் கூட்டம் உதகை வடக்கு ஒன்றிய செயலாளர் காமராஜ் தலைமையில் முன்னாள் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி முன்னிலையில். நடுவட்டம் பேரூர் கழகம் சார்பில் நடைபெற்றது. தலைமைக் கழக அறிவுறுத்தல்களையும். அறிவிப்புகளையும் விளக்கி கூடலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும். பொறியாளர் அணி துணை செயலாளருமான ஆர். பரமேஷ் குமார் பேசினார். உடன் பெயர் உடன் பொதுக்குழு உறுப்பினர் மோகன் குமார் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.